சாய்ராம் மேலாண்மை கல்வி நிறுவனம் சார்பில்

# சர்வதேச கருத்தரங்கம்

சென்னை, டிச.25–

சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் மேலாண்மை கல்வி நிறுவனம் சார்பில் அகில இந்திய தொழில்நுட்ப கழகத்துடன் இணைந்து 2 நாள் பன்னாட்டு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதில் 'பொருளாதாரம், வணிகம், நிதி, மனிதவளம் மற்றும் தொழில்நுட்பம் – தொடர் வளர்ச்சிக்கு' என்ற தலைப்பில் சுமார் 250 ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டு இந்தியா மற்றும்



அயல்நாட்டு பேராசிரியர்களும், சமூக அறிவியல் ஆராய்ச்சி யாளர்களும் கலந்து கொண்டு தங்களது கருத்துகள் மற்றும் ஆய்வுகளை பரிமாறிக்கொண்டனர்.

நிறைவு விழாவில் மத்திய மந்திரி சுதர்சனநாச்சியப்பன் கலந்துகொண்டு கருத்தரங்கு இதழை வெளியிட்டார். அதனை சாய்ராம் குழுமத்தலைவர் லியோமுத்து பெற்றுக்கொண் டார்.

விழாவில் கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் கே.மாறன், முதல்வர் சி.வி.ஜெயக்குமார், இயக்குனர் வி.ஆர்.ராசமா ணிக்கம், தலைமை வியூக அதிகாரி எஸ்.சீத்தாராமன், சாய்ராம் தொழில்நுட்பக்கல்லூரி முதல்வர் கே.பழனிக்குமார் ஆகி யோர் கலந்து கொண்டனர்.